## யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா - 2010

**தலைவர்**
**திரு. க. நவகீஸ்வரன்**
(அதிபர்)

**பிரதம விருந்தினர்**
**திரு. கந்தையா சுகீந்திரன்**
(தொழிலதிபர், ஐக்கிய இராச்சியம்)

**சிறப்பு விருந்தினர்**
**திரு. சிதம்பரப்பிள்ளை மாணிக்கராசா**
(கோட்டக் கல்விப் பணிப்பளார், நல்லூர்)

**கௌரவ விருந்தினர்**
**திருமதி சரோஜினிதேவி ஆறுமுகராசா**
(சமூக சேவையாளர்)

**03.11.2011**

# நிகழ்ச்சி நிரல்

1. மங்கல விளக்கேற்றல்
2. இறை வணக்கம்
3. வரவேற்பு நடனம்
4. வரவேற்புரை
5. ஆசியுரை
6. அதிபர் அறிக்கை
7. கௌரவ விருந்தினர் உரை
8. மாணவர் பேச்சு
9. சிறப்பு விருந்தினர் உரை
10. பிரதம விருந்தினர் உரை
11. பரிசில் வழங்குதல்
12. நன்றியுரை
13. கலை நிகழ்ச்சிகள்

    குழு நடனம்

    குழுப்பாட்டு

    வில்லுப்பாட்டு

    ஆங்கிலப்பாட்டு

    ஆங்கிலப்பேச்சு
14. பாடசாலைக்கீதம்

# யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

## மகுட வாசகம்

*கல்வியே கருந்தனம்*

## *Motto*

*Education is supreme wealth*

## தூர நோக்கு

மாறுகின்ற உலகின் சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறும் புண்புசார் தன்மை கொண்ட சமூகத்திற்கேற்ற ஒழுக்கமுள்ள பயன்படு நற்பிரசைகளை உருவாக்கல்.

## *Vision*

*In the production of Good citizen's to the adhesive globe to stand the challenges in case of successive multi characteristics society.*

## பணிக்கூற்று

மகிழ்ச்சிகரமான கற்றலுக்குரிய கவின்நிலையை ஏற்படுத்தி அதி உச்சப் பயன்பாட்டு வினைத்திறனுடன் வளங்களைக் கையாண்டு மாணவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சிகளினூடாக உச்சப் பெறுபேறுகளைப் பெற்று சமூக விழுமியங்களுக்கேற்ப ஆரோக்கிய மாக வாழ வழிசமைத்துக் கொடுத்தல்.

## *Mission*

*To put forward a way to the pupils for healthy and social values in case of optimum use of resources effectively through the achievement of competencies in creating happy learning environment.*

# அதிபர் அறிக்கை

எமது வித்தியாலயத்தில் கொலுவீற்றிருந்து கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்ற நாமகளின் பாதங்களை வணங்கி எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

இன்றைய இத்தகைய நற்திருநாளில் முதன்மை விருந்தினராக வருகை தந்து தமது அன்புக் கரங்களால் எம் மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களை உவந்தளிக்க வருகை தந்திருக்கும் பெருந்தகையும் தொழிலதிபரும், சமூக சேவையாளருமாகிய திரு. கந்தையா சுஜீந்திரன் அவர்களே! அவர் தம் பாரியார் திருமதி அருணகுமாரி சுஜீந்திரன் அவர்களே! சிறப்பு விருந்தினராக இங்கு வருகை தந்திருக்கும் எமது நல்லூார்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர். திரு. சி. மாணிக்கராசா அவர்களே! கௌரவ விருந்தினராக இங்கு வருகை தந்திருக்கும் பெருந்தகை கொடையாளர் திருமதி சறோஜிதேவி ஆறுமுகராசா அவர்களே! ஏனைய பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே, நலன் விரும்பிகளே, மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கங்களை தெரிவித்துக் கொள்வதில் பேர் உவகையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

எமது அன்பான வேண்டுதலை ஏற்றுதனது கருணைக் கரங்களால் பரிசுப் பொருட்களையும் சான்றிதழ்களையும் எமது மாணவச் செல்வங்களுக்கு வழங்கிக் கௌரவிப்பதற்காக இங்கு வருகை தந்திருக்கும் பெருமதிப்பிற்குரிய சமூகசேவையாளர் திரு. கந்தையா சுஜீந்திரன் அவர்களும் அவர்தம் பாரியார் அவர்களும் இன்றைய இந்நன்நாளில் எமது பாடசாலைக்கு வருகை தந்ததையிட்டு நாம் எல்லோரும் மிகுந்த மகிழ்வடைகின்றோம்.

பிரதம விருந்தினர் அவர்கள் கல்வியில் அதியுயர் நிலையினை அடைந்து கணக்கியல் துறைப் பட்டத்துடன் ஐக்கிய இராச்சியம் சென்று புகழ்பெற்ற தொழிலதிபராக விளங்குகின்றீர்கள். அத்தகைய பேர் அறிவாளர் எமது பாடசாலையின் அபிவிருத்தித் தேவை கருதி ஐக்கிய இராச்சியத்தில் தங்கள் நலன் விரும்பிகளுடன் ஒன்றுகூடி

கலந்துரையாடிய செய்தி எம்மையெல்லாம் மனங்குளிர வைத்துள்ளதுடன் எமக்கு மேலும் உற்சாகத்தையும் ஊட்டியுள்ளது. தங்களின் இந்த முயற்சி வெற்றியளித்து எமது பாடசாலையில் பல்லாண்டு காலமாக இருந்துவரும் பாரிய பிரச்சினையான கட்டட தேவையின் ஒரு பகுதியாவது தீர்க்கப்பட வேண்டும் என்று நாம் இவ்விடத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பெருமதிப்புக்குரிய திருமதி.அருணகுமாரி சுஜீந்திரன் அவர்களும் கணவருக்கு ஏற்ற சமூகசேவகியாகவும் விளங்குகின்றார். இவருடைய சகோதரிகள் எமது பாடசாலையில் கல்வி கற்றிருகின்றார்கள் என்ற அன்புத் தொடர்பு காரணமாக எமது பாடசாலைக்கு கடந்த வருடம் கணவருடன் விஜயம் செய்து வளப்பற்றாக்குறைகளை அவதானித்து அவற்றைத் தீர்ப்பதற்கு தனது கணவருடன் சேர்ந்து தாங்கள் எடுக்கும் முயற்சிகண்டு எமது மனங்குளிர்கின்றது.

எமது மதிப்புக்குரிய கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு. சி. மாணிக்கராஜா அவர்கள் வடமாகாணத்தில் உள்ள கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் அனைவரிலும் சிறப்பானவராக தெரிவு செய்யப்பட்டு அதற்கான சான்றிதழையும் பரிசில்களையும் இந்த ஆண்டு பெற்றிருக்கின்றார். அந்தவகையில் அவர்கள் சிறப்பு விருந்தினராக இங்கு வருகை தந்திருப்பது எம்மை மகிழ்ச்சியில் திளைக்க வைத்துள்ளது எனில் அது மிகையாகாது.

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்கு ஞாபகார்த்த நிதி உதவியினை கடந்த இரண்டு வருடங்களாக வழங்கி வரும் வெளிநாட்டில் வதியும் பழைய மாணவியான திருமதி இரட்ணசிங்கம் புவனேஸ்வரி அவர்களுக்கும் நான் இந்த இடத்தில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு ஆலோசனைகளை வழங்கி பலவகையிலும் எம்மை வளப்படுத்தி வரும் வலயக்கல்வி திணைக்களத்திற்கு இவ்விடத்தில் நான் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரதும் பணியை நினைவு கூர்ந்து

பாராட்டுவதோடு எமது பாடசாலை ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையையும் இச்சந்தர்ப்பத்தில் மனமுவந்து பாராட்டுகின்றேன்.

எமது பாடசாலை மாணவர்களின் நலன் கருதி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தாராள மனம் படைத்த பெருந்தகைகளின் உதவிகளைப் பெற்று செயற்படுத்தி வருகின்றோம். இப் பரிசளிப்பு விழா வினையும் கூட அத்தகைய அன்பர்களின் உதவியினாலேயே செய்ய காலம் கைகூடியிருப்பது மனமகிழ்வை தருகின்றது.

இவ் வருடம் வலயக்கல்வி அலுவலகத்தின் நிதி உதவியுடன் 250,000 ரூபா செலவில் சிறுதிருத்த வேலைகளும் வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசுதல் செயற்பாடும் இடம் பெற்று வருவதுடன் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் எமது பிரதேசத்தை வதிவிடமாக கொண்டவருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களும் 100,000 ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து இவ்வருடம் பாடசாலை சிறுதிருத்த வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்து தந்துள்ளார். அத்துடன் கொக்குவில் பிரதேசத்துடன் மிக நெருங்கிய தொடர்பினை கொண்டவரான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்களும் இவ்வருடம் 50,000 ரூபாவை கட்டட சிறுதிருத்த வேலைகளுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒதுக்கியுள்ளதுடன் இந்த வருடம் எமது பாடசாலையும் சிறுவர்நேச பாடசாலையாக வலயக்கல்வி திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்டதுடன் கணனி அறையை அமைப்பதற்காக 100,000ரூபாவை யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த வருடம் இடைநிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் EKSP திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் 5 கணனிகள் வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைக் கல்விசார் ஆளணியினர்

எமது வித்தியாலயத்தின் ஆசிரிய ஆளணியரினரின் (2011) எண்ணிக்கை 16 ஆகும். தற்காலிக இணைப்பில் 01 ஆசிரியரும் பகுதிநேர ஆசிரியர்கள் 02 பேரும் உள்வாங்கப்பட்டு 19 ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## எமது பாடாசலையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றோர்.

1. திருமதி. ப. தியாகராசா
2. திரு. வீ. நகுலேஸ்வரன்
3. திருமதி. கௌ. சயந்தராஜன்

## தற்காலிக இணைப்பில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

1. திருமதி யோ. சுகிர்தராஜ்

## மாணவர் விபரம்

### வித்தியாலய மாணவர்களின் பரம்பல்

தரம் 1 தொடக்கம் 5 வரை கல்விகற்கும் மாணவர்கள் 60 பேரும் தரம் 6 தொடக்கம் 11 வரை கல்விகற்கும் மாணவர்கள் 95 பேரும் ஆக மொத்தம் 155 மாணவர்கள் வித்தியாலயத்தில் கல்விகற்கின்றனர்.

1. தரம் 10,11 மாணவர்களின் விஞ்ஞானபாட செயன்முறை வேலைப்படிவம் தயாரித்தல்.
2. தரம் 7-11 மாணவர்களின் சுய ஆக்கச் செயற்பாட்டை மேம்படுத்தல்.
3. தரம் 10,11 மாணவர்களின் கணிதபாட அடைவுமட்டத்தை உயர்த்துதல்.
4. தரம் 10,11 மாணவர்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் குறிக்கும் திறனை உயர்த்துதல்.
5. தரம் 11 மாணவர்களின் ஆங்கிலபாட அடைவுமட்டத்தை உயர்த்துதல்.
6. தரம் 11 மாணவர்களின் சங்கீதபாட அடைவு மட்டத்தை உயர்த்துதல்.
7. தரம் 6-11 மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் களப்பயணம் (கல்விச் சுற்றுலா)
8. தரம் 1,2 மாணவர்களின் எழுதும் திறனை விருத்திசெய்தல்.
9. தரம் 3 மாணவர்களின் வாசிப்பு, எழுத்து திறனை மேம்படுத்தல்.
10. தரம் 4 மாணவர்களின் எழுத்தாக்கத்திறனை மேம்படுத்தல்.
11. தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை அடைவு மட்டத்தினை உயர்த்துதல்.
12. தரம் 1-5 மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் கல்விச் சுற்றுலா.
13. ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு ஆக்கத்திறன் பயிற்சி வழங்குதல்.
14. ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு சித்திரப்பயிற்சி வழங்குதல்.
15. மொழிப்பாடம் தொடர்பான துணை நூல்களைப்பெறல்.
16. சமூகவிஞ்ஞானப் பாடம் தொடர்பான துணை நூல்களைப்பெறல்.
17. பண்ணிசை பாடும் திறனை மேம்படுத்தல்.
18. ஆங்கிலபாட அலகுகளில் அறிவினை மேம்படுத்தல்.

# கல்வி அடைவுகள்

எமது பாடசாலையில் பொதுப்பரீட்சைகளான தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகள் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டுவரை பகுப்பாய்வின் அடிப்படையில் அதிகரித்து வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு 2005~ 2011.**

| வருடம் | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|---|
| தோற்றியோர் | 09 | 13 | 05 | 13 | 12 | 06 | 07 |
| சித்திபெற்றோர் | - | - | - | 01 | - | - | 01 |
| 100 புள்ளிக்கு மேல் பெற்றோர் | 01 | 02 | 01 | 01 | 03 | 04 | 04 |

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர்**

| ஆண்டு | மாணவர்பெயர் | பெற்றபுள்ளி |
|---|---|---|
| 2008 | சு. ரஞ்சித் | 115 |
| 2011 | ரா. அபியாபிரியதர்சினி | 152 |

# க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறு

# 2005-2010

| வருடம் | 2005 | | 2006 | | 2007 | | 2008 | | 2009 | | 2010 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தோற்றியோர் | சித்திவீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் | தோற்றியோர் | சித்தி வீதம் |
| சைவசமயம் | 10 | 100 | 09 | 89 | 18 | 100 | 15 | 100 | 10 | 100 | 10 | 100 |
| தமிழ் | 10 | 90 | 09 | 89 | 18 | 72 | 15 | 93.3 | 10 | 100 | 10 | 100 |
| விஞ்ஞானம் | 10 | 40 | 09 | 11 | 18 | 33 | 15 | 46.6 | 10 | 50 | 10 | 70 |
| கணிதம் | 10 | 70 | 09 | 11 | 18 | 22 | 15 | 46.6 | 10 | 60 | 10 | 60 |
| சமூகக்கல்வி | 10 | 90 | 09 | 56 | 18 | 78 | - | - | - | - | - | - |
| ஆங்கிலம் | 10 | 0 | 09 | 0 | 18 | 17 | 15 | 0 | 10 | 0 | 10 | 0 |
| சங்கீதம் | 04 | 100 | 05 | 80 | 08 | 100 | 10 | 80 | 10 | 90 | 10 | 66 |
| சித்திரம் | 06 | 0 | 04 | 25 | 10 | 20 | 05 | 80 | - | - | - | - |
| தமிழ் இலக்கியம் | 10 | 90 | 09 | 56 | 18 | 72 | - | - | - | - | - | - |
| வரலாறு | - | - | - | - | - | - | -15 | 93.3 | 10 | 80 | 10 | 70 |
| புவியியல் | 10 | 80 | 09 | 33 | 18 | 78 | 15 | 93.3 | 10 | 80 | 10 | 80 |
| விவசாயம் | 05 | 100 | 02 | 100 | 09 | 100 | 06 | 100 | 07 | 56.6 | 04 | 75 |
| மனைப் பொருளியல் | 05 | 100 | 07 | 57 | 09 | 78 | 09 | 66.6 | 03 | 100 | 06 | 83 |

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2010

தலைவர் : திரு.க.தவகீஸ்வரன்

செயலாளர் : திரு.ஆ. இராசகுமார்

பொருளாளர் : திருமதி ம. பத்மநாதன்

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2011

தலைவர் : திரு.க.தவகீஸ்வரன்

செயலாளர் : திருமதி. பு. மஞ்சுளா

பொருளாளர் : செல்வி. ஜெ. இராசேந்திரம்

எமது பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளுக்கு கணிசமானளவில் பங்களிப்பினைச் செய்து வருகின்றது. வித்தியாலயத்தில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் பெற்றோர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

## பழைய மாணவர் சங்கம் 2011

தலைவர் : திரு.க.தவகீஸ்வரன்

செயலாளர் : உ. நிரோஜன்

பொருளாளர் : பா. தர்மிலன்

அதிபர் தலைமையிலான பழைய மாணவர் சங்கம் பாடாசலையில் நடைபெறும் அனைத்துச் செயற்பாடுகளிலும் பங்களிப்பை நல்கி வருகின்றது.

## பாடசாலை அபிவிருத்திக் குழு 2011 (SDC)

தலைவர் : திரு.க.தவகீஸ்வரன்

உப தலைவர் : திருமதி. ல. நாகையா

செயலாளர் : திருமதி. யோ. திலகேஸ்வரி

பொருளாளர் : திருமதி. ந. நட்பினி

பழையமாணவர் உறுப்பினர்கள் : யோ.கஜிதா
ச. ரதீபன்
ஊ. ருசிதா

பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்

திருமதி ச. சுதாமணி
திரு. ஆ. ரவீந்திரராசா
திருமதி பி. சந்திராதேவி

கல்வி வலயப் பிரதிநிதி : திருமதி ஜி. முகுந்தன்.

## எமது வித்தியாலயத்துக்கு உதவி வழங்கியோர் (2010)

எமது பாடசாலை வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட திரு. சி. ஜெயபாலசிங்கம், திரு. சு. விஜயகுமார் ஆகியோரின் பெரும் முயற்சியினால் அமரரான திருமதி. கலா நடராசா ஆசிரியையின் ஞாபகார்த்தமாக எமது பாடசாலை மாணவர்களுக்கு 55 சோடி சப்பாத்துக்கள் திரு. S. நடராசா அவர்களால் வழங்கப்பட்டன.

வெளிநாட்டில் வசிக்கும் Dr.சி.சஞ்சீவ் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 10,000 ரூபா பெறுமதியான கணித உபகரணப் பொருட்கள், புத்தகப்பைகள் என்பன வழங்கப்பட்டன. அத்துடன் திரு. சி. ஜெயபாலசிங்கம் அவர்களின் பெரு முயற்சியினால் வெளிநாட்டில் வசிக்கும் பழைய மாணவர் திரு. அருணன் அவர்களால் 30 மாணவர்களுக்க 10,000 ரூபா பெறுமதியான புத்தகப்பைகள், கணித உபகரணங்கள், பேனைகள் என்பனவும் வழங்கப்பட்டன.

பழைய மாணவர் திரு.ப.சிவதாசன் அவர்களால் மாணவர்களுக்கு 10 சோடி சப்பாத்துக்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன 04.08.2010இல் திரு.விஜயகுமார் அவர்களால் C.D.M.A தொலைபேசி வித்தியலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு திருமதி சறோஜினிதேவி ஆறுமுகராசா அவர்களினால் எமது பாடசாலைக்கு 50 பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. மேலும் கந்தப்பிள்ளை கனகராசா

ஞாபகார்த்தமாக மாணவர்களுக்கு பெறுமதியான 11 சில்வர் வாளிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

வெளிநாட்டில் வசித்து வரும் திரு.ஸ்ரீ.பகீரதன் அவர்களால் பெற்றோரை இழந்த மூன்று மாணவர்களுக்கு தொடர்ந்தும் கற்றலுக்கு தேவையான வசதிகள் அனைத்தும் வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

சிம்மியா மிஷன்

சிம்மியா மிஷன் 08.10.2010 தொடக்கம் எமது பாடசாலையில் கல்வி கற்கும் தாய், தந்தையை இழந்த மாணவர்களுக்கு மாலை நேர வகுப்பக்களை நடத்துவதுடன் அவர்களுக்க சுகாதார வசதிகள், உடைகள், சத்துணவு என்பனவற்றையும் வழங்கி வருகின்றது.

## ஆசிரியர் நலன்புரிச் சங்கம் 2010

தலைவர் : திருமதி ந. அகிலதாஸ்

செயலாளர் : திருமதி பி. சரவணபவானந்தன்

பொருளாளர் : திருமதி இ. உருத்திரன்

ஆசிரியர்களின் நலன் பேணும் நோக்குடன் இச் சங்கம் செயற்பட்டு வருகின்றது. ஆசிரியர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளில் பங்கேற்றுக் கொள்வதுடன் இடமாற்றம் பெற்றுச் செல்லும், ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்கு பிரியாவிடை வைபவங்களையும் நடத்தி வருகின்றது.

## பாடசாலை மாணவ முதல்வர்கள் 2010

1. அ. சணாஸ்
2. க. கனகராஜ்
3. அ. டிசாந்
4. அ. சங்கீர்
5. இ. வரதா
6. ஆ. லக்சாயினி

7. த. சுபஸ்ரிகா
8. சி. றிபேக்கா
9. ர.மதுஷா
10. நா. சுகன்யா

## இணைபாடவிதானச் செயற்பாடுகள்

எமது வித்தியாலயத்தின் இணைபாடவிதானச் செயற்பாடுகள் திருப்திகரமானதாக அமைந்துள்ளது. மெய்வல்லுனர் போட்டி, தமிழ்மொழித்திறன், ஆங்கில மொழித்திறன், கணித விஞ்ஞானப் போட்டி, சமூக விஞ்ஞானப் போட்டி, ஆக்கத்திறன் போட்டி, அழகியல் போட்டி, சமய அறிவுப் போட்டி, ஆரம்பக்கல்விப் போட்டி, விஷேட தேவையுடையோர் போட்டி போன்றவற்றில் மாணவர்கள் பங்குபற்றி சான்றிதழ்களும் பெற்றுள்ளனர்.

## மாணவர் மன்றங்கள்

எமது வித்தியாலயத்தில் பல்வேறு மன்றங்கள் இயங்குகின்றன. இந்துமாமன்றம், தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், கவின்கலை மன்றம், சுகாதார மன்றம், கணித விஞ்ஞான மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், விவசாய, மனையியல் மன்றம், ஆரம்பக்கல்வி மன்றம், விளையாட்டுக்கழகம் ஆகியன மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணரும் வகையில் இயங்குகின்றன.

## மன்றச் செயற்பாடுகள்

### 1. இந்துமாமன்றம்

பொறுப்பாசிரியர் : திருமதி ல. நாகையா
தலைவர் : செல்வன் அ. சாத்வீகன்
செயலாளர் : செல்வி ர. மதுஷா
பொருளாளர் : செல்வி ஆ. லக்சாயினி

மாணவர்கள் மத்தியில் சமய அறிவையும் இறை நம்பிக்கையையும் விழிப்புணர்வையும் வளர்க்கும் நோக்குடன் இயங்கி வருகின்றது. வாரம் தோறும் வெள்ளிக்கிழமை விசேட பூசையும் கூட்டுப் பிரார்த்தனையும் நடாத்தி வருகின்றது. வருடந்தோறும் பொங்கல்விழா, சமய குரவர்களின் குருபூசை தினம், நவராத்திரி விழா என்பவற்றை சிறப்பாக நடாத்தி வருகின்றது. அத்துடன் சைவபரிபாலன சபை நடாத்தும் போட்டிப் பரீட்சை, பாடசாலை மட்ட, கோட்ட, வலய மட்ட சமய அறிவுப் போட்டிகளில் மாணவர்களை பங்குபற்றச் செய்து பரிசில்களும் பெற்றுள்ளனர்.

## 2. தமிழ் மன்றம்

பொறுப்பாசிரியர் : திருமதி ப. மரியகுணசீலி
தலைவர் : செல்வி. இ. வரதா
செயலாளர் : செல்வி ஆ. லக்சாயினி
பொருளாளர் : செல்வன் அ. டிபிள்சன்

எமது மன்றம் ஒவ்வொரு தவணையும் இரண்டு தடவைகள் மாணவர் மன்றத்தை நடாத்தி மாணவரது கலையார்வம் வளர்க்கப்படுகின்றது. சிறந்த கலை நிகழ்வுகள் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றது.

## 3. கணித விஞ்ஞான மன்றம்

பொறுப்பாசிரியர் : திரு. வீ நகுலேஸ்வரன்
திருமதி.வ. நகுலநாதன்
தலைவர் : செல்வன் ஜெ. தர்சன்
செயலாளர் : செல்வி சி.றிபேக்கா
பொருளாளர் : செல்வி.ர. தாரகா

## மன்றச் செயற்பாடுகள்

இம்மன்றத்தை சிறப்புற நடாத்தி மாணவர்களது அறிவியல் திறன்கள் வளர்க்கப்பட்டதுடன் பரிசில்களும் வழங்கி ஊக்கவிக்கப்பட்டது.

## 4. சமூக விஞ்ஞான மன்றம்

பொறுப்பாசிரியர் : திருமதி ம. முரளிகரன்
தலைவர் : செல்வன் அ. சங்கீர்
செயலாளர் : செல்வன் அ. சாத்வீகன்
பொருளாளர் : செல்வி. ப.பகீர்த்தனா

## மன்றச் செயற்பாடுகள்

இம்மன்றம் வரந்தோறும் பொது அறிவுப் போட்டிகளை நடத்துவதுடன் கோட்ட, வலய மட்ட போட்டிகளில் பங்குபற்றினர். இம்மன்றம் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பரிசில்களையும் வழங்கி கௌரவித்தது.

## 5. சுகாதார மன்றம்

பொறுப்பாசிரியர் : திருமதி இ.உருத்திரன்
தலைவர் : செல்வன் அ. டிசாந்
செயலாளர் : செல்வி ச.சுபஸ்ரிகா
பொருளாளர் : செல்வி. ச. கீர்த்திகா

மாணவர்களின் உடல் உள நலனைப் பேணும் நோக்குடனும் பாடசாலைச் சுத்தம், ஒழுங்கு என்பவற்றைப் பேணும் நோக்குடனும் செயற்பட்டு வருகின்றது.

## 6. நுண்கலை மன்றம்

பொறுப்பாசிரியர் : திருமதி ந. நட்பினி
தலைவர் : செல்வி. இ. வ்ரதா
செயலாளர் : செல்வன் அ. சணாஸ்
பொருளாளர் : செல்வன். ஜெ. நிரோஜன்

ஒவ்வொரு தவணையும் நடைபெறும் சகல கலை நிகழ்வுகளும் நுண்கலை மன்ற உறுப்பினர்களால் முன்னாயத்தப்படுத்தப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. கலை நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

## 7. ஆங்கில மன்றம்

பொறுப்பாசிரியர் : திருமதி பி. சரவணபவானந்தன்
தலைவர் : செல்வி. ஆ. லக்சாயினி
செயலாளர் : செல்வன் தி.யியான்சன்
பொருளாளர் : செல்வி. ர. மதுசா

ஆங்கில தினப் போட்டிக்கு மாணவர்களைத் தயார்படுத்தி பாடசாலை மட்ட, கோட்ட மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்கின்றது. அத்துடன் பாடசாலையில் நடைபெறும் பல்வேறு கலைநிகழ்வுகளிலும் ஆங்கில மன்ற நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 8. விவசாய மன்றம்

பொறுப்பாசிரியர் : திருமதி ப. சுந்தரலிங்கம்
தலைவர் : செல்வன் அ. சணாஸ்
செயலாளர் : செல்வன் க. கனகராஜ்
பொருளாளர் : செல்வன். அ. சாத்வீகன்

இம்மன்றம் பாடசாலைச் சூழலை அழகு செய்தல், பயன்தரு மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றது. இம்மன்றத்தினர் கோட்ட மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றுள்ளனர்.

## 9. மனைப்பொருளியல் மன்றம்

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | : | திருமதி மா. தயாநிதி |
| தலைவர் | : | செல்வி ஆ. லக்சாயினி |
| செயலாளர் | : | செல்வி சி. றிபேக்கா |
| பொருளாளர் | : | செல்வி. ச. சுபஸ்ரிகா |

பாடசாலையில் நடைபெறும் பொது விழாக்கள், கலை நிகழ்வுகள், விளையாட்டுப்போட்டிகளின்போது முன்மாதிரியாகச் செயற்பாட்டார்கள்.

## 10. ஆரம்பக்கல்வி மன்றம்

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | : | திருமதி சு. இராஜேஸ்வரி |
| தலைவர் | : | செல்வன் அ. கவிதாஸ் |
| செயலாளர் | : | செல்வி ர. ஜனனி |
| பொருளாளர் | : | செல்வி சி. சலோமி |

எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி மன்றத்தில் தரம் 1-5 மாணவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. அவற்றுள் கவிதை, கதை, குழுப்பாடல், நாடகம், பேச்சு என்பன குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாக சிறப்பாக இடம் பெற்றன. கோட்ட, வலயமட்டப் போட்டிகளில் இம் மாணவர்கள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விசேட கல்வி அலகு

பொறுப்பாசிரியர் : திருமதி வ. பாலச்சந்திரன்

விசேட கல்வி அலகு எமது பாடசாலையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வலகில் அங்கம் பெறும் மாணவர்கள் வலயத்தினால் நடாத்தப்படும் ஆக்கத்திறன், சித்திரம் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களும் பெற்று வருகின்றனர். பாடசாலை மட்டத்தில் "மாற்று வலுவுள்ளோர் தினம் கொண்டாப்பட்டு அத்தினத்தில் அம்மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## வங்கிச் சேவை

பொறுப்பாசிரியர் : திருமதி வ. பாலச்சந்திரன்

மாணவர்களிடையே சேமிப்பு பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பன மாதாந்தம் வருகைதந்து மாணவர்களின் சேமிப்புக்களை சேகரித்து வைப்பிலிடுகின்றது. வைப்பிலிடும் மாணவர்களுக்கு சிறு அன்பளிப்புக்களையும் வழங்கி வருகின்றது. அத்துடன் இவ்வங்கிகளால் நடாத்தப்படும் போட்டிகளிலும் எமது மாணவர்கள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அன்பான பெற்றோர்களே!

தங்கள் குழந்தைகள் இன்று வெகுமதிகளாக பரிசுப் பொருட்களையும் சான்றிதழ்களையும் பெறுவதைப் பார்த்து இன்புறுவதற்காக இங்கு வருகை தந்திருக்கின்றீர்கள். தங்களின்

வருகையால் நாமும் இன்புறுகின்றோம். உங்கள் பிள்ளைகள் கல்வியில் உயர்நிலை அடைந்து சமூக அந்தஸ்தினை பெற நீங்கள் அவர்களின் கல்வியிலும் நன்நடத்தையிலும் என்றுமே அக்கறை கொண்டவர்களாக அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

## அன்பான மாணவச் செல்வங்களே!

ஒளிமயமான எதிர்கால நல்வாழ்வு உங்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக உங்களைப் பெற்றோர் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். உங்களை நற்பிரசைகளாக உருவாக்க வேண்டும் என்ற கனவுடன் எங்கள் ஆசிரியர்கள் அயராது பணிபுரிகின்றனர். நீங்கள் நல்ல சிந்தனையுடன் கற்றலிலும் இணைபாட விதான செயற்பாடுகளிலும் முனைப்புடன் செயற்பட வேண்டும் என இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

எம்து பாடசாலையை உருவாக்கிய ஸ்தாபகர் மற்றும் வளர்ச்சிப் படிகளில் இதுவரை காலமும் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பயன்பெற்ற மாணவர்கள் அனைவரையும் மனதில் நிறுத்தி இறையாசியுடன் 2010ம் ஆண்டுக்கான அதிபர் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

## எமது வித்தியாலயத்தின் தேவைகள்

இப்பாடசாலையில் 20 X 60 அடி அளவுடைய சீர்குலைந்த பழைய மண்டபம் நீண்டகாலமாகவே அகற்றப்படாமல் உள்ளது.

இதனால் வசதியான அலுவலக அறை, கணனி அறை, சங்கீத அறை, செயற்பாட்டு அறை, மனையியல் அறை, களஞ்சிய அறை என்பன இல்லாமல் உள்ளமை பாரிய இடநெருக்கடியையும் வளப்பற்றாக்குறையையும் தோற்றுவித்துள்ளது. எனவே புதிய கட்டடம் ஒன்றை அமைத்தல் என்பது எமது பாடசாலையின் மிகப் பெரிய தேவையாக உள்ளது.

# நன்றி நவிலல்

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த சமூக சேவையாளர் திரு. கந்தையா சுஜீந்திரன் அவர்களுக்கும் அவர்தம் பாரியார் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. மாணிக்கராசா அவர்களுக்கம் எமது பரிசளிப்பு விழாவின் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்த பெருந்தகை கொடையாளர் திருமதி சறோஜினிதேவி ஆறுமுகராசா அவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்.

இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு ரூ 15,000 பெறுமதியான பரிசில்களை அமரர் இரட்ணசிங்கம் புவனேஸ்வரி அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கிய திரு. யோ. சந்திரகுமார் அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றிகள்.

இன்றைய பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெற வேண்டும் என்ற நோக்குடன் நிதியுதவி வழங்கிய ஆசிரியர்கள், ஏனைய அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். இவ் விழாவில் கலந்து சிறப்பித்த அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள், எமது மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

**அதிபர்**
**யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்**

# எமது பாடசாலை ஆசிரியர் குழாம் 2011

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1. | திரு | க. | தவகீஸ்வரன் | - SLPS 2.11 B.A (Hons) Dip.in Ed.MEd |
| | 2. | திருமதி | ல. | நாகையா | - SLTS 1 Trd.Hindusium |
| | 3. | திருமதி | வ. | நகுலநாதன் | - SLTS 2.1 Trd. Science |
| | 4. | திருமதி | வ. | பாலச்சந்திரன் | - SLTS 2.11 Trd.Primary |
| | 5. | திருமதி | ம. | பத்மநாதன் | - SLTS 1 B.A, Dip in Ed |
| | 6. | திருமதி | இ. | உருத்திரன் | - SLTS 2.1 B.A, Dip in Ed |
| | 7. | திருமதி | ம. | முரளிகரன் | - SLTS 3.1 M.A,.B.A,(Hons) Dip.in.Ed |
| | 8. | திருமதி | ந. | நட்பினி | - SLTS 3.1 Music Dip |
| * | 9. | திருமதி | ம. | கிருஷ்ணராஜா | - SLTS 2.11 Maths.Dip, B.A |
| | 10. | திருமதி | பி. | சரவணபவானந்தன் | - SLTS 3.1 Trd.English |
| | 11. | திருமதி | சு. | இராஜேஸ்வரி | - SLTS 2.11 Trd.Primary |
| * | 12. | திருமதி | ந. | அகிலதாஸ் | - SLTS 2.1 Trd.Primary, B Ed |
| | 13. | திருமதி | பு. | சிவகுமாரன் | - SLTS 2.11 Trd.Primary, B.A |
| | 14. | திருமதி | கு. | தர்மகுலராணி | - SLTS 2.11 Trd.Primary |
| | 15. | திருமதி | பி. | சபாநாதன் | - SLTS 2.1 Trd.Science |
| | 16. | செல்வி | இ. | ஜெயராணி | - SLTS 2.11 Bsc.Dip.in.Ed |
| | 17. | செல்வி | த. | கலாவித்தியா | G.C.EA/L |
| | 18. | திருமதி | ப. | சுந்தரலிங்கம் | - SLTS 1 Trd. Agri |
| | 19. | திருமதி | ம. | தயாநிதி | - SLTS 2.11 Trd.Home Scie |
| | 20. | திரு | பி. | அன்ரனி | - SLTS 2.1 Trd.Rc |
| | 21. | திருமதி | ம. | சிவபாலசுந்தரம் | - SLTS 2.1 Trd. Primary |
| | 22. | திருமதி | மி. | ஜெயகாந்தன் | - SLTS 3.1 B.A |

* திருமதி. ந. அகிலதாஸ் 01.03.2011ல் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராக பதவி உயர்வு பெற்று வலிகாம வலயத்திற்கு இடமாற்றம் பெற்றச் சென்றுள்ளார்.
* திருமதி ம. கிருஷ்ணராஜா 03.05.2011ல் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

# பரிசில் பெறுவோர் விபரம்

## தரம் 1 (2011) அனைத்து மாணவர்களுக்கும்

1. ம.கவிஷாந்
2. சி.காந்தறூபன்
3. ஈ. அபிநாஷ்
4. அ. டெனிஷன்
5. யோ. சுதர்சினி
6. மு காருண்யா
7. அ. யுவர்சனா
8. த. அபிநயா
9. இ. வினூகா
10. சி. சாரால்

## தரம் 1 (2010)

| | |
|---|---|
| செ. கிரிகாந் | - பொதுத்தகைமை |
| | - சுற்றாடல் |
| பு. சாருகா | - கணிதம், தமிழ் |

## தரம் 2

| | |
|---|---|
| கெ. பிரும்சிகா | - பொதுத்தகைமை |
| | - கணிதம், தமிழ் |
| பு. சாதுஷன் | - சுற்றாடல் |

## தரம் 3

| | |
|---|---|
| சி. நிகிதா | - பொதுத்தகைமை |
| | - தமிழ், ஆங்கிலம், சுற்றாடல் |
| யோ. பாஸ்கரன் | - கணிதம் |

தரம் 4

சி. சிரோமி - பொதுத்தகைமை

- சுற்றாடல்

ரா. அபியாபிரியதர்சினி - கணிதம்

நா. சாய்குமார் - தமிழ், ஆங்கிலம்

தரம் 5

ர. ஜனனி - பொதுத்தகைமை

- கணிதம், தமிழ்,

ஆங்கிலம், சுற்றாடல்

தரம் 6

இ. கோகுலன் - பொதுத்தகைமை

- விஞ்ஞானம், வரலாறு

ப. யதுசன் - தமிழ்

சி. நிக்சனா - கணிதம்

தரம் 7

சு. ரஞ்சித் - பொதுத்தகைமை

- தமிழ், கணிதம், விஞ்ஞானம்

ஜெ. நிந்துயா - வரலாறு

## தரம் 8

| | |
|---|---|
| பா.நர்மிலா | - பொதுத்தகைமை |
| | - தமிழ் , வரலாறு |
| ஆ.ரதுர்ஜன் | - விஞ்ஞானம் |
| இ. கபிலேசன் | - கணிதம் |

## தரம் 9

| | |
|---|---|
| த. தனுஸ்ரன் | - பொதுத்தகைமை |
| | - தமிழ், விஞ்ஞானம், வரலாறு |
| அ. ஆதித்தன் | - கணிதம் |
| பி. தனுஷா | - தமிழ் |

## தரம் 10

| | |
|---|---|
| ர. மதுஷா | - பொதுத்தகைமை |
| | - விஞ்ஞானம், வரலாறு |
| ப. பகீர்த்தனா | - கணிதம் |
| நா. சுகன்யா | - தமிழ் |

**க.பொ.த சாதாரண தரம் - 2010**

1. இ. வரதா A 2B 5C
2. அ. லக்சாயினி A B 5C S
3. க.கனகராஜ் A 4C 2S
4. உ. நிஷாந்தினி A 3C 4S
5. அ. சணாஸ் 4C 3S
6. சி. கஜேந்திரன் A 2B C 5S

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2011**

1. ரா. அபியாபிரியதர்சினி – 152 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்.

100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

1. சி. சிரோமி - 133
2. க. வைஷ்ணவி - 129
3. இ. தமிழ்நிலவன் - 124
4. நா. சாய்குமார் - 110

# விசேட பரிசில் பெறுவோர்

**சமய அறிவுப் போட்டி - 2010**

**மாலை கட்டுதல்**

1. ச. நிவர்த்திகா - கோட்டமட்டம் - முதலாம் இடம்
   வலயமட்டம் - முதலாம் இடம்

**தோரணம் பின்னுதல்**

2. ச. ஐங்கரபதி - கோட்டமட்டம் - மூன்றாம் இடம்

**சகலகலா வல்லிமாலை ஓதுதல்**

3. வி. வித்தியா - கோட்டமட்டம் - மூன்றாம் இடம்

**100 சதுரக்கணித்தல் (ஆரம்பக்கல்வி)**

4. க. வைஷ்ணவி - கோட்டமட்டம்

**விளையாட்டுத்துறை (விசேட கல்வி)**

**100m ஓட்டம்**

5. ச. நிவர்த்திகா - வலய மட்டம் - முதலாம் இடம்

**அழகியற் போட்டி (விசேட கல்வி)**

**ஆக்கம்**

ச. நிவர்த்திகா - வலயமட்டம் - இரணடாம் இடம்


**தனிநடனம்**


ச. நிவர்த்திகா - வலயமட்டம் - இரண்டாம் இடம்


**தனிப்பாட்டு**


ச. நிவர்த்திகா - வலயமட்டம் - இரண்டாம் இடம்


# க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறு (2006 – 2010)





















ஆங்கிலம்
0.2
0.1
0
2006
2007
2008
2009
2010


புவியியல்
100%
50%
0%
2006
2008
2010


சங்கீதம்
200%
100%
0%
2006
2008
2010


விவசாயம்
200%
100%
0%
2006
2008
2010


மனைப் பொருளியல்
200%
100%
0%
2006
2007
2008
2009
2010

## பரிசளிப்பு விழாவிற்கு நிதி உதவியோர் விபரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அமரர் புவனேஸ்வரி இரட்ணசிங்கம் நினைவாக | | | | ரூ | 15,000 |
| திருமதி சறோஜினிதேவி ஆறுமுகராசா | | | | ரூ | 5,000 |
| செல்வி தர்மலிங்கம் மாலதி | | | | ரூ | 2,000 |
| 1. திரு. | க. | தவகீஸ்வரன் | (அதிபர்) | ரூ | 1,000 |
| 2. திருமதி | ல. | நாகையா | (ஆசிரியர்) | ரூ | 500 |
| 3. திருமதி | வ. | நகுலநாதன் | " | ரூ | 500 |
| 4. திருமதி | வ. | பாலச்சந்திரன் | " | ரூ | 500 |
| 5. திருமதி | ம. | பத்மநாதன் | " | ரூ | 500 |
| 6. திருமதி | இ. | உருத்திரன் | " | ரூ | 500 |
| 7. திருமதி | ம. | முரளிகரன் | " | ரூ | 500 |
| 8. திருமதி | ந. | நட்பினி | " | ரூ | 500 |
| 9. திருமதி | பி. | சரவணபவானந்தன் | " | ரூ | 500 |
| 10. திருமதி | ப. | சுந்தரலிங்கம் | " | ரூ | 500 |
| 11. திருமதி | பு. | சிவகுமாரன் | " | ரூ | 500 |
| 12. திருமதி | கு. | தர்மகுலராணி | " | ரூ | 500 |
| 13. திருமதி | பி. | சபாநாதன் | " | ரூ | 500 |
| 14. செல்வி | ஜெ.இராசேந்திரன் | | " | ரூ | 500 |
| 15. செல்வி. | த. | கலாவித்தியா | " | ரூ | 500 |
| 16. திரு | பி. | அன்ரனி | " | ரூ | 500 |
| 17. திருமதி | ம. | சிவபாலசுந்தரம் | " | ரூ | 500 |
| 18. திருமதி | ம. | தயாநிதி | " | ரூ | 500 |
| 19. திருமதி | ப. | சுந்தரலிங்கம் | " | ரூ | 500 |
| 20. திருமதி. | மி. | ஜெயகாந்தன் | " | ரூ | 500 |

# பாடசாலைக் கீதம்

வாழ்க என்று வாழ்த்துவோம்
வாழ்த்திச் சிரமும் தாழ்த்துவோம்
வாழும் அன்னை கொக்குவில்
நாமகள் வித்தியாலயம் (வாழ்க)

செந்தமிழும் ஆங்கிலமும்
சேரும் தொழிற் கல்வியும்
விந்தை மிகு நல்லறிவியல்
விளங்கும் விவசாயமும் (வாழ்க)

அந்தமில்லா அழகியல்
ஆடலோடு பாடலும்
தந்த வித்தியாலயம்
தாய் அவளைப் போற்றுவோம் (வாழ்க)

நேர்மை மிகக் நெஞ்சுடன்
நீர் நிலத்தில் வாழ்ந்திட
கூர்மை மிக்க அறிவினை
கொடுத்து எம்மைக் காப்பவள் (வாழ்க)

உயிரை வளர்க்கும் ஆன்மீகம்
உயர்ந்த நல்ல சமரசம்
பயில உதவி அம்மையே
பணிந்திடுவோம் அன்னையே (வாழ்க)

(இயற்றி இசையமைத்தவர் : பண்டிதர் சு. ஆறுமுகம், தாவடி)